1987 மார்ச் 28]

போதாது. நடுவிலேயுள்ள பல பாலங்களை உயர்த்திக்கட்ட வேண்டும். அதற்கு வேண்டிய நிதிகளைப் பெற்று, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றுக்குத் தண்ணீர் வருவது செம்பரம்பாக்கம் ஏரி முழுமையும் நிரம்பியதற்குப் பிறகுதான். அதைத் திறந்துவிடுகிறபோது அந்நீர் வந்து அடையாறு நிரம்புகிறது. முன்பு கூட வெள்ளம் வந்தபோது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் படகிலே வந்து அதற்குப் பிறகு காரிலே சென்னைக்கு வந்தார் என்று பத்திரிகையிலே பார்த்தோம். அதுபோன்று செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியதற்குப் பிறகு அங்கே திறந்துவிடப்படுகின்ற நீர் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் இருக்கிற மணப்பாக்கம் பகுதியிலே வந்துதான் இந்த அடையாறு ஆற்றுக்கு வருகிறது. ஆகவே அதனைத் தடுப்பதற்கு செம்பரம்பாக்கம் ஏரியையும் ஆழப்படுத்த வேண்டுமென்ற நிலையில், இந்த ஏரியைத் திறந்துவிடுவதன் காரணத்தால், இயற்கையாக வெள்ளம் ஏற்படாமல், செயற்கையான முறையிலே பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு நிரந்தரமான தீர்வு காண செம்பரம்பாக்கத்திலிருந்து வெளியேறுகின்ற நீரைத் தேக்கி வைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தக்கூடிய செயற்குறிப்பு அரசின் கவனத்தில் இருக்கிறது.

பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்திலுள்ள பச்சை ஆற்றில் அணைக்கட்டு.

229—(* வினா எண் 2134) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்து அருகில் உள்ள பச்சை ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பின் வேலை தொடங்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த எஸ்டிமேட்டிற்காக போடப்பட்டுள்ள தொகை எவ்வளவு? இந்த வேலை இன்னும் எத்தனை மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தப் பழனி தொகுதி, பாப்பம்பட்டி ஏரியாவில் இன்றைக்கு தண்ணீர் ஒரு குடத்திற்கு எட்டணா வீதம் வாங்கப் படுகிறது. அப்படியும் சில சமயங்களில் கிடைக்கவில்லை. சீக்கிரமாக தண்ணீர் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், பெர்குலேஷன் வாட்டர் கிணறுகளுக்குக் கிடைக்கும். எனவே தயவுசெய்து விரைவிலே ஆரம்பிக்க வேண்டும். இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த பச்சையாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ரூ. 1,120 இலட்சம் ஆகும் என்ற குறிப்பைக் கொடுத் திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருக் கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்து வேலைகள் எடுக்கப்படும்.

உசிலம்பட்டி வட்டத்தில் அசுவமா நதித் திட்டம்

230—(*வினா எண் 8696) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தாலுகாவில் நடைபெற்று வந்த அசுவமா நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசுவமா நதித் திட்டம் முதல் நிலை ஆய்வில் (Preliminary Investigation) உள்ளது.